# நூலகர் தினவிழா - 2026

ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் நூலகர் தின விழா 12.08.2026 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் **முனைவர் ஈ. ஷீலா** தலைமை வகித்தார்.

கல்லூரி நூலகர்**முனைவர் மா. தாமரைச்செல்வி** வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக நூலகரும், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறைத் தலைவரும், Chairperson, School of Social Sciences **முனைவர் ப. பாலசுப்பிரமணியன்**கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினரை ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர்**முனைவர் த. மங்கையர்க்கரசி**அறிமுகப்படுத்தினார். விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் வாழ்த்துரை வழங்கினர்., கணிதவியல் துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் **முனைவர் தே. பிரேமலதா**, வரலாற்றுத்துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் **முனைவர் அ. தீபா**, விலங்கியல் துறை இணைப் பேராசிரியர் **செல்வி ச. ராஜேஸ்வரி** ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.விழாவின் சிறப்பு நிகழ்வாக, **“Historical Monuments of Tirunelveli District”**என்ற நூல் வெளியிடப்பட்டது. நூலின் அறிமுகத்தை வரலாற்றுத்துறையின் முழுநேர ஆராய்ச்சி மாணவர்**இ. சுபாஷ்**வழங்கினார். நூலாசிரியர் உரையை வரலாற்றுத்துறையின் முன்னாள் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர்**முனைவர் ச. முருகவேல்**வழங்கினார்.தொடர்ந்து நூல் வெளியீடு மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கல்லூரி முதல்வர் நூலை வெளியிட, சிறப்பு விருந்தினர் பெற்றுக்கொண்டார். முதல்வர் மற்றும் சிறப்பு விருந்தினர் இணைந்து பரிசுகளை வழங்கினர்.நிகழ்ச்சியின் நிறைவில் மாணவ நூலகச் செயலாளர்**க.கனிதா** நன்றியுரை வழங்கினார். நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவுற்றது. விழா மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம், நூலகப் பயன்பாடு மற்றும் அறிவை மேம்படுத்தும் வகையில் சிறப்பாக அமைந்தது.



பழையபேட்டை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் நூலகர் தின விழா கொண்டாடப்பட்டது.

# ராணி அண்ணா கல்லூரியில் நூலகர் தின விழா

**திருநெல்வேலி, ஆக.13–**

பழையபேட்டை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் நூலகர் தின விழா நடந்தது.

விழாவிற்கு கல்லூரி முதல்வர் ஷீலா தலைமை வகித்தார். நூலகர் தாமரைச் செல்வி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக மனோன் மணியம் சுந்தரனார் பல்கலை., நூலகர் பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினரை ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் மங்கையர்க்கரசி அறிமுகப் படுத்தினார்.

பேராசிரியைகள் சுமிதா, பிரேமலதா, தீபா, ராஜேஸ்வரி வாழ்த்துரை வழங்கினர்.

"ஹிஸ்டாரிகல் மோனோமென்ட்ஸ் ஆப் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட்'' நூல் வெளியிடப்பட்டது. வரலாற்றுத் துறை ஆராய்ச்சி மாணவர் சுபாஷ் நூல் அறிமுகம் செய்தார். நூலாசிரியர் உரையை வரலாற்றுத்துறை முன்னாள் தலைவர் முருகவேல் வழங்கினார். கனிதா நன்றி கூறினார்.

நெல்லை

CITIZEN NEWS

# ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் நூலகர் தின விழா கொண்டாடப்பட்டது.

Published by: Citizen\'s News | 13-08-2026





ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் நூலகர் தின விழா 12.08.2026 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் ஈ. ஷீலா தலைமை வகித்தார். கல்லூரி நூலகர் முனைவர் மா. தாமரைச்செல்வி வரவேற்புரையாற்றினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக நூலகரும், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறைத் தலைவருமான முனைவர் ப. பாலசுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். விழாவின் முக்கிய நிகழ்வாக "Historical Monuments of Tirunelveli District" என்ற நூல் வெளியிடப்பட்டது. நூலின் அறிமுகத்தை வரலாற்றுத்துறை ஆராய்ச்சி மாணவர் இ. சுபாஷ் வழங்கினார். நூலாசிரியர் உரையை வரலாற்றுத்துறையின் முன்னாள் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் ச. முருகவேல் வழங்கினார். மேலும், நூலகர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட வினாடி வினா, புத்தக விமர்சனம், கவிதை மற்றும் கட்டுரை எழுதும் போட்டிகளில் பங்கேற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் கல்லூரி பணியாளர்கள் கலந்து கொண்டனர். மாணவிகளிடையே வாசிப்புப் பழக்கம், நூலகப் பயன்பாடு மற்றும் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் விழா சிறப்பாக அமைந்தது. மாணவ நூலகச் செயலாளர் க. கனிதா நன்றியுரை வழங்கினார்.


RANI ANNA
COLLEGE FOR


RANI ANNA GOVERNMENT
FOR WOMEN

LIBRARIAN'S DAY BOOK REVIEW COMPETITION -2026




LIBRARIANS DAY QUIZ COMPETITION-2026




GPS Map Camera
காந்திநகர், தமிழ் நாடு, இந்தியா
Pmw6+7f8, 1/6, பழையபேட்டை, காந்திநகர், தமிழ் நாடு
627008, இந்தியா
Lat 8.746102° Long 77.661071°
புதன், 05/08/2026 02:12 பிற்பகல் GMT +05:30
Google